**சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஞாயிறு - 2018/ Ecological Sunday 2018**

பொருள்: படைப்பு கடவுளின் மாட்சிமையின் வெளிப்பாடு

நீதிமொழிகள் 8: 22-31 சங்கீதம் : 19

வெளிப்படுத்தல் 21:1-8 லூக்கா 8 : 22 - 25

தந்தையாம் கடவுள்; குமாரனாகிய கிறிஸ்து மற்றும் தூய ஆவியாரின் பெயரால் ஆமென்.

நம்முடைய சிறுவயது முதல் பல்வேறு வகைப்பட்ட கதைகளை நாம் கேட்டிருக்ககூடும். குறிப்பாக அரசவம்சத்தினரின் கதைகள், கானகத்தை மையமாகக் கொண்ட கதைகள், நன்நெறிக் கதைகள் மற்றும் வீர தீரச் செயலை உள்ளடக்கிய கதைகள் ஆகியவற்றை அதிகமாகக் கேட்டிருக்கக்கூடும். இவற்றுள் பல சவால்களை உள்ளடக்கிய பெருங்கடல் மற்றும், கடல் பிரயாணம் சார்ந்த கதைகளும், இத்துடன் தொடர்புடைய நிகழ்வுகளும், பிரயாணத்தின் வியத்தகு முடிவுகளும் நம்மை வியப்புற செய்த கதைகள் என்பதை மறக்க இயலாது. திருமறையில் பெருங்கடல் மற்றும் தண்ணீர் பரப்புடன் தொடர்புடைய நிகழ்வுகளை பல்வேறு நபர்களின் வாழ்வியலோடு அறிந்து கொள்கிறோம். அவற்றுள் குறிப்பாக, பெருவெள்ள நிகழ்வில் படைப்புகளோடு காக்கப்பட்ட நோவா, மோசேயுடன் செங்கடலைக் கடந்த இஸ்ரேயல் மக்கள், யோனா தீர்க்க தரிசியின் கடற்பிரயாண நிகழ்வு, நீர்மேல் நடந்தது மற்றும் காற்றையும், கடலையும் கடிந்து கொண்ட கிறிஸ்துவின் செயல்பாடு, மற்றும் பிரயாணத்தின் போது கப்பல் சேதத்தில் பாதுகாக்கப்பட்ட திருத்தூதுவர் பவுலின் செயல்பாடு ஆகியன முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இந்நிகழ்வுகள் அனைத்தும் அற்புதமான கடவுளின் பாதுகாப்பை உணர்ந்து கொண்ட கருத்தாழமிக்க சிந்திக்கச் செய்யக்கூடிய திருமறை நிகழ்வுகளாகும். இவ்வாண்டின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஞாயிறு தியானத்தில் நாம் “இயேசுக் கிறிஸ்து காற்றையும் கடலையும் அமைதிப்படுத்தும்” நிகழ்வின் அடிப்படையில் சிந்திக்க அழைக்கப்படுகின்றோம்.

அன்பிற்குரியவர்களே! பெருங்காற்றை அமைதிப்படுத்தும் கிறிஸ்துவின் செயல், சமநோக்கு நற்செய்தி நூல்களான லூக்கா 8: 22-25, மந்தேயு 8:23-27மற்றும் மற்குவின் நற்செய்தி 4:35-41ம் வசனத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. அக்கறை நோக்கிய கலிலேயாக்கடல் பிரயாணத்தில், இயேசுக் கிறிஸ்துவின் நித்திரையின் போது ஏற்பட்ட பெருங்காற்றில், சீடர்களின் வாழ்விற்கான பயத்தின் சூழலின் கிறிஸ்து காற்றையும்,

கடலையும் அமைதிப்படுத்தின செயல்பாடு சீடர்களை பயத்திலும், வியப்பிலும் ஆழ்த்துகிறது.

கடவுளின் மாட்சிமையாகிய படைப்பை பாதுகாக்க வலியுறுத்துகின்ற தியானத்தின் ஐந்து குறிப்புகளை ஆங்கில பதம் G-L-O-R-Y என்கிற சொல்லின் எழுத்துகளின் பொருளுடன் தியானிக்க முற்படுவோம்.

1. படைப்பாளராகிய கடவுள் (God of Creation)

ஒருங்கின்மையிலிருந்து (Chaos) உலகைப் படைக்கும் கடவுள் தம்முடைய வாயின் சொல்களினால் படைப்புகளை உருவாக்குகின்றார் குறிப்பாக, நிலம், நீர் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துகின்றார். இயேசுக் கிறிஸ்து தம்முடைய வாயின் வார்த்தையின் மூலம் கடலின் சீற்றத்தைக் கட்டுப்படுத்தி அமைதிப் படுத்துகின்றார். இயற்கை கடவுளின் அருட்கொடை ஆழ்கடல் மற்றும் இயற்கை இறைவனின் கட்டுப்பாட்டில் இயங்குகின்றது என்பதையும் கடல்நீர் நீர்க் கடவுளின் கற்பித்தலினால் விலகுவதை சங்கீதம் 104-7 ம் பாடலிலும், தம்முடைய ஆற்றலினால் தண்ணீரைக் கட்டுபடுத்திய இறைவனின் மாண்பை யோபுவின் புத்தகம் 26-12 ம் வசனத்திலும், இயற்கையின் மீது அதிகாரமுடைய கடவுள் என்பது சங் 29 ம் பாடலின் வாயிலாக அறிந்து கொள்ள முடியும். இத்தியானத்திற்கு துணையான நற்செய்திப் பகுதியின் மூலம் கிறிஸ்து அமைதியற்ற கடலை அமைதிப்படுத்துவது ஒழுங்கின்மையினின்று உலகத்தைப் படைத்த படைப்பாளராகிய கடவுளின் பணியோடு ஒப்பிடப்படுவது மட்டுமின்றி படைப்பாளரின் மாண்பை உணர்ந்து கொள்ளச் செய்கிறது.

இன்று இயற்கையின் மீதான அதிகாரத்தை தனிமனிதன் எடுத்துக்கொள்வதும், இயற்கையின் விதிகளை மீறிய அத்துமீறல்களும், படைப்பாளராகிய கடவுளின் நிகரற்ற படைப்பை உருக்குலையச் செய்கின்றன.

இன்று தனிமனிதனின் தேவை, பேராசை போன்ற செயல்களினால் இயற்கையின் அமைப்பு உருக்குலைக்கப்படுகின்றது, குறிப்பாக கட்டுமானம், நதிநீர் பங்கீடு, நீர் மேலாண்மை, விளைநிலம் ஆக்கிரமிப்பு குறித்த பிரச்னை, வனவளம் அழிக்கப்படுதல், மரபணு மாற்றம் செய்யப்பட பயிர்கள், இவற்றின் மூலம் கடவுளின் படைப்பு அழிக்கப்படுகின்றது. இயற்கையை உக்கிராணத்துவதுடன் பாதுகாக்க வேண்டிய மனிதன் இயற்கையை சூறையாடுகின்ற செயல் உலகெங்கிலும் நடைபெறுகின்றது. கடவுள் இயற்கையின் மீது அதிகாரம் உடையவர்; கடவுளின் படைப்பை பாதுகாக்க படைக்கப்பட்ட படைப்பு மனிதன் என்பதை உணர்ந்து கொள்ள அழைக்கப்படுகின்றோம்.

2. மாசுபடுத்தப்படும் படைப்பு : Littering Creation

இன்றைய சூழ்நிலையில் படைப்பு பல்வேறு நிலைகளில் மாசுபடுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அன்றாட வாழ்வில் இன்று பலதரப்பட்ட கழிவுகள் சுற்றுசூழலைச் சீர்கேடாக்குகின்றது. பயனற்ற மின்சாதனப் பொருட்கள், உடைந்த கண்ணாடிகள், பிளாஸ்டிக் கழிவுகள், உணவுக் கழிவுகள் என மட்காத கழிவுகள் இன்று பெருகி சுற்றுப்புறச்சூழ்நிலையை மாசுபடுத்துவதோடு இல்லாமல், பல்வேறு நோய்களைப் பரப்பும் நுண்ணுயிர்கள் பெருகுவதற்கு வாழிடமாகவும் மாறுகின்றது. இக்கழிவுகள் மண்ணில் வாழும் சிறு உயிரினங்கள், தாவரங்கள், பறவைகள், விலங்குகள் மற்றும் நீர்வாழ் உயிரினங்களின் வாழ்விடத்தைப் பாதிப்பதோடு மற்றுமின்றி மனிதனின் வாழ்வாதாரத்தையும் பாதிக்கின்றது. இவ்வாண்டின் கருப்பொருளை "பிளாஸ்டிக் மாசுபாட்டை ஒழிப்போம்" என்கிற வாக்கின் அடிப்படையில் ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டம் அறிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது. சுற்றுச்சூழல் விழிப்புணர்வு இன்றி நாம் வாழும் வாழ்வாதாரங்களை அழிப்பது மனித இனத்திற்கே தீங்கு விளைவிக்கக்கூடியது. கடவுளின் படைப்பை அளிக்க முற்படும் மனிதனின் தன்மை கடவுளின் பார்வையில் நீதியற்ற செயல் என்பதை உணர்ந்து கொள்ள அழைக்கப்படுகின்றோம்.

சுற்றுச்சூழல் மாசுபாடு இன்று கடவுளின் படைப்பை பொருளற்றதாக்கியுள்ள நிலையில், மலைபோல் குவிந்துள்ள பிளாஸ்டிக் கழிவுகள் இன்று மனுக்குலத்திற்கே சவாலாகியுள்ளது. இந்நிலை நீடிக்குமாயின், கிறிஸ்துவுடன் பயணம் செய்த சீடர்கள் போலவே நாமும், "ஐயரே! நாங்கள் மடிந்து போகிறோம்!" என்று கூக்குரலிட வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவோம் என்பது மறுக்க முடியாத உண்மை.

பெருங்காற்றின் அழிவில் இருந்து படகை பாதுகாத்த கிறிஸ்துவின் செயல் போல, இன்று சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும், விழிப்புணர்வை ஏற்படுத்தவும் திருச்சபையாக நாம் அழைக்கப்படுகின்றோம். இப்பணியை அருட்பணியோடு இணைந்து செயல்படுத்தி படைப்பையும், மனுக்குலத்தையும் பாதுகாக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். அன்பிற்குரியவர்களே, அழிவின் பேரலைகளையும், உக்கிரத்தின் பெருங்காற்றையும் ஏற்படுத்துவது நம்முடைய செயல்பாடுகளே என்பதை நாம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

3. படைப்பைப் பாதுகாத்தலுக்கான நமது கடமை: (Obligation to Creation)

கலிலேயாக் கடல் என்பது கனசரேத் ஏரி என்றும் அழைக்கப்படும், மிகக் குறைந்த பரப்பளவுள்ள நீர்நிலை எனிலும் மலைகளால் சூழப்பட்ட பூகோள அமைப்பை உடையதாகும். சூழப்பட்ட மலைகளின் காரணமாக, குளிர்ச்சியான மற்றும் வறண்ட காற்று எப்பொழுதும் இந்த நீர்ப்பரப்பின் மீது காணப்படும். காற்றின் அழுத்தமும் வெப்பமும் ஒருங்கே இணைவதன் மூலம் பல நேரங்களில் பெருங்காற்று இந்த கடல் பரப்பையும் அவற்றோடு இணைந்த வாழ்வாதாரங்களையும் சேதப்படுத்தும் என்பது குறிப்பிடத்தக்கது. கடல் மட்டத்திலிருந்து 680 அடி கீழானதும், நன்னீரை உடையதுமான இந்த ஏரி சுமார் 200 அடி ஆழமுள்ளது என்பது இந்தக் கடலின் தனித்துவம் ஆகும். பெருங்காற்றும், அலைகளும் அடிக்கடி இக்கடலில் ஏற்பட்டாலும், கிறிஸ்துவுடன் பயணம் செய்த சீடர்களுக்கு இது திகைப்பையும், பயத்தையும் ஏற்படுத்தியது. மாற்கு நற்செய்தியாளர் இச்சம்பவம் ஏற்பட்டது மாலை வேளை எனவும் இவர்களுடன் மற்ற படகுகளும் மீன் பிடித்ததில் ஈடுபட்டிருந்ததையும் குறிப்பிடுகின்றார்.

கடல் சார்ந்த வாழ்க்கை வாழும் பெரும்பாலான சீடர்களுக்கு இவ்வனுபவம் அனுதின சவாலாக இருப்பினும், இம்முறை கிறிஸ்துவின் செயல்பாடு மற்றும் இயற்கையை அமைதிப்படுதலுக்கான கிறிஸ்துவின் கட்டளை சீடர்களுடைய வாழ்வில் புதிய நம்பிக்கையையும், புதிய தைரியத்தையும் ஏற்படுத்துகின்றது. இன்றும் சுற்றுச்சூழல், இயற்கை, வனவளம் பல்வேறு மக்களினங்களின் வாழ்வின் ஆதாரமாக விளங்குகின்றது. குறிப்பாக, பழங்குடியினர், மண்ணுக்குரிய பூர்வீகக் குடியினருக்கு வாழ்வின் அடிப்படையாக விளங்குகின்றது. இயற்கையின் மீதான தாக்குதல், வன ஆக்கிரமிப்பு, சதுப்பு நில ஆக்கிரமிப்பு, விளைநில ஆக்கிரமிப்புகள் ஆகியவற்றின் மூலம் பல பின்தங்கிய மக்களின் வாழ்வு கேள்விக்குறியாகின்றது. "நாங்கள் மடிந்து போகிறோம்" என்கிற நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

அன்பிற்குரியவர்களே! சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஞாயிறு தினத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்விற்கு நம்பிக்கை அளிக்கும் வகையில் கிறிஸ்துவைப் போல் அவரைப் பின்பற்றும் மக்களாகிய நாமும் அவர்கள் வாழ்வில் இயற்கையைப் பாதுகாப்பதன் மூலம் புதிய நம்பிக்கையை ஏற்படுத்த நம்மை ஒப்படைப்போம்.

4. படைப்பின் மீதான கடவுளின் மீட்பு (Redemption of Creation)

இயேசுகிறிஸ்து தம்முடைய சீடர்களுடன் மேற்கொண்ட சூழல் இயல் பயணம் (Eco Tour) படைப்பிற்கு விடுதலை அளிக்கும் அருட்பணியாக

அறிந்துகொள்ளப்படுகின்றது. அக்கறைப்பட்ட கிறிஸ்து கல்லறையில் வாழும் லேகியோன் என்று அழைக்கப்பட்ட பிசாசினால் தன்னை சமூகத்தில் இருந்து பிரிக்கப்பட்ட மனிதனுக்கு விடுதலை அளிக்கும் பணி செய்கின்றார். மறுவாழ்வு பெற்றவனாக அம்மனிதன் கிறிஸ்துவால் விடுதலை பெறுகின்றான். மீண்டும் கலிலேயாவில், சமூகத்தினால் கிருஸ்துவை நேர் எதிரே பார்க்க இயலாத 12 ஆண்டு பெரும்பாடுள்ள பெண் அவருடைய பின்பக்கமாக வஸ்திரத்தின் ஓரத்தை தொட்டு சுகம் பெறுகின்றாள். அத்துடன் கிறிஸ்துவின் விடுதலை அருளும் அருட்பணி யவீருவின் மகளின் மறுவாழ்வை “சிறு பெண்ணே எழுந்திரு” என்ற வாக்கின் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றது.

கிறிஸ்துவின் கடற்பயண நிகழ்வும், கடற்கரையோர அருட்பணியும், கடற்கரை கடந்த திருப்பணியும் படைப்பின் விடுதலையை மையமாக்கப்பட்ட பணியே ஆகும் (liberation) இன்று பலருக்கு சூழல் கரிசனை சுற்றுச்சூழல் பாதுகாப்பு திருப்பணி நாட்டமின்றி இருப்பினும், கடவுளால் படைக்கப்பட்ட இயற்கையை பாதுகாப்பதும், கடவுளின் படைப்பின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதும் அருட்பணிகளில் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இன்று திருச்சபை கடவுளின் படைப்புகளின் மீதான மீட்பை கொடுக்க சுற்றுச்சூழல் அருட்பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். பவுல் அடிகளான் ரோமர் 8 ஆம் அதிகாரம் 21&22 ம் வசனத்தில் “அது அழிவுக்கு அடிமைப்பட்டிருக்கும் விடுவிக்கப்பட்டு, கடவுளின் பிள்ளைகளுக்குரிய பெருமையையும், விடுதலையையும் தானும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற எதிர்நோக்கோடு இருக்கிறது. இந்நாள் வரை படைப்பு, அனைத்தும் ஒருங்கே பேறுகால வேதனையுற்றுத் தவிக்கின்றது என்பதை நாம் அறிவோம்”. ஒட்டுமொத்த படைப்பிற்கும் விடுதலை அருளும் பணியை கிறிஸ்துவிடம் கற்றுக்கொள்கிறோம். இது ஒரு சமூகப் பணியல்ல மாறாக கிறிஸ்துவின் சீடர்களாக கடவுளின் படைப்பை பாதுகாப்பதற்கான இவைகளின் திட்டமும், கட்டளையும் என்பதை உணர்ந்து செயல்பட அழைக்கப்படுகின்றோம்.

5. புதுப்பித்தலுக்கான கடவுளின் படைப்பு: (Yearning of Creation)

இயேசு கிறிஸ்து புயலின் நடுவில், ஒழுங்கின்மையின் சூழலை தம்முடைய வார்த்தையின் மூலம் அமைதியும், புதிய படிப்புமாக மாற்றுகின்றார். சங் 29:3ம் பாடலின் படி, கேயாசில் இருந்து “காஸ்மாஸ்” எனும் புதிய உலகைப் படைக்கின்றார். புதிய படைப்பு என்பது மீண்டும் முழுமையாக மாற்றப்படப்போகின்ற உலகம் அன்று; மாறாக புதிதாக்கப்படுகின்ற உலகம். கிறிஸ்துவின் மூலம் புதிய படைப்பை உருவாக்கி

முடித்துவிட்டார். புதிய என்கிற கிரேக்க வார்த்தை "kaine" என்பதின் பொருள் "renewed" மீள் உருவாக்கம் என்பதாகும். அதாவது புதுப்பிக்கப்படுதல்.

புதிதாக்கப்படுதல்;

ஆண்டவரின் சத்தம் தண்ணீரின் மீது தொனிக்கிறது, கடவுளின் குரல் நீர்த்திரளை ஆகிறது, மீள் உருவாக்கப் பணியை கிறிஸ்துவின் மூலம் இப்புவியில் நிறைவேற்ற திருச்சபை அழைக்கபடுகின்றது. படைப்பை தூய்மைப்படுத்த; படைப்பை புதுப்பிக்க அழைக்கப்படுகின்றோம். அன்றாட வாழ்வில் கிறிஸ்துவின் மூலம் படைப்பின் மாண்பை காக்க, படைப்பின் மேன்மையை மீட்டெடுக்க மாற்றத்திற்கான கருவிகளாய் வாழ அழைக்கப்படுகின்றோம்.இவ்வுலகு கடந்த மறுவாழ்வு அல்ல; மாறாக கடவுள் படைத்த இவ்வுலகில் படைப்பின் இறைவனைக் காண அழைக்கப்படுகின்றோம்.

நிறைவாக, கடவுளின் மனிதன் பல்வேறு சூழ்நிலைகளில் கடவுளுக்கு எதிராக தீமையில் ஈடுபடுகின்றான். கடவுளின் படைப்பின் மேன்மையை உணர்ந்தவாறு எயல்பட முக்கியக் காரணிகள் உதவி செய்யும்.

i. God of Creation:

படைப்பாளராகிய கடவுளின் தன்மையை அறிந்து கொண்டவர்களாக, இயற்கையின் விதிகளை மாற்ற முயலாமல் இயற்கையை நேசிக்கவும்; படைத்த கடவுளை மகிமைப்படுத்தவும் அழைக்கின்றோம்.

ii. Littering Creation:

படைப்பை நம் செயல்பாடுகள் மூலம் மாசுபடுத்த முற்படுவோமேயானால் நாமே நமக்கு தீங்கு விளைவித்துக் கொள்வோம். சுற்றுபுறத் தூய்மையை பாதுகாப்போம்.

iii. Obligation to Creation :

இப்புவியைச் சார்ந்த பறவைகள், விலங்குகள் மற்றும் உயிரினங்கள் மட்டுமின்றி சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வு வளம் பெற; புதிய நம்பிக்கையை கிறிஸ்துவின் மூலம் ஏற்படுத்த அழைக்கப்படுகின்றோம்.

iv. Redemption to Creation:

படைப்பைப் பாதுகாக்கும் பணியை திருப்பணி எனக்கருதி: படைப்பின் மேன்மையை உலகிற்கு எடுத்துக்கூற திருச்சபையாக அழைக்கப்படுகின்றோம்.

v. Yearning of Creation :

இவ்வுலகு கடந்த மறுவாழ்வு அல்ல: மாறாக கடவுள் படைத்த இவ்வுலகில் படைப்பில் இறைவனைக் காண அழைக்கப்படுகின்றோம்.

இத்தியானத்தில் நமக்கு முன்பாக வைக்கப்படும் கேள்வி, அனைத்தையும் நேர்த்தியாகப் படைத்த கடவுள் மீது உள்ள நம்பிக்கையோடு, படைப்பை பாதுகாக்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அருட்பணிக்கு நாம் ஆயத்தமா?

அனைத்தையும் நேர்த்தி படைத்த கடவுள் தாமே நம் மூலம் படைப்பின் மாண்பை காக்க அருள்புரிவாக, குறிப்பாக அவரோடு இணைந்து சூழல் திருப்பணியை செய்யவும் ஒருங்கின்மையின் சூழலில் இருந்து புது உலை படைக்கும் ஆற்றல் மிக்க பணியையும் செயல்படுத்த கிருபை புரிவாராக.

சகல கனமும், மாட்சியையும் தந்தை, மைந்தன் மற்றும் தூய ஆவியருக்கே உரித்தாகுக. ஆமென்.

Prepared by Rev. Viji Varghese Eapen (former Director of CSI Syond Department of Ecological Concerns) MKD.